தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

மலர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2019 - புரட்டாசி 28 — 14-10-'88 இதழ்: 7

## அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழக முதலாம் கருத்தரங்கு




அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம் ஒன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் முதலாவது கருத்தரங்கு 17-9-'88 சனிக்கிழமை காலை 10 மணியளவில் தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாக மொழிப்புலக் கட்டடக் கருத்தரங்கு அறையில் நடைபெற்றது. அறிவியல் அறிஞர்கள் பலரும் திரளாக வந்திருந்தனர்.

தொடக்க விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. இராம. சேதுநாராயணன், நடுவண் அரசின் முன்னாள் நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம், டாக்டர் எம். ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேசுவரன், டாக்டர் காமேசுவரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

'வளர்தமிழில் அறிவியல்' என்ற கருத்தரங்கமலரைத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேசுவரன் வெளியிட, டாக்டர் காமேசுவரன் முதற்படியைப் பெற்றுக்கொண்டார்.

அறிவியல் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இராம. சுந்தரம் வந்திருந்தோரை வரவேற்றார். டாக்டர் சு. நரேந்திரன் நன்றி நவின்றார்.

18-9-'88 அன்று நிகழ்ந்த நிறைவுவிழாவில் அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வா.செ. குழந்தைசாமி கலந்துகொண்டு நிறைவுரையாற்றினார்.

## நூல்கள் 50% விலைக் குறைப்பு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஏழாம் ஆண்டு விழாவையொட்டி 1988 செப்டம்பர் முடிய அளிக்கப்பட்ட 50% விலைக்குறைப்பு பலருடைய வேண்டுகோளுக்கு இணங்க 1988 அக்டோபர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

* களஞ்சியங்களுக்கு 25% கழிவு உண்டு.
* மாணவர் பதிப்புக்குக் கழிவு இல்லை.

## தத்துவ மையத்தில் பாரதியார் விழா

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையத்தின் சார்பில் 12-9-'88 அன்று தத்துவ மைய இயக்குநர் முனைவர் பி.கே.சுந்தரம் தலைமையில் பாரதியார் விழா கொண்டாடப் பெற்றது. "பாரதியார் பாடல்களிலுள்ள வாழ்வியல் கருத்துக்கள்" என்னும் தலைப்பில் தத்துவ மையத்தின் சிறப்பாய்வாளர் திரு இரா. கோலப்பப்பிள்ளை சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

தனி மனித மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்காக பாரதியார் தொடாத துறைகளே இல்லை என்பதையும் தம் பாடல்களின்வழி மக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டினார் என்பதையும் பாரதி பாடல்களை மேற்கோள் காட்டி எடுத்துரைத்தார். இன்றைய நிலையில் சமுதாயம் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைக் குறிப்பிடும் பாரதியார் பாடல்களை எடுத்துக்கூறினார். "மனதிலுறுதி வேண்டும், வாக்கினிலேயினிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும்" என்ற பாரதி பாடல்கள் அவரது அறக் கருத்துக்களைச் சுட்டுவதாகக் கூறினார். பெண்ணுரிமை, தொழில்புரட்சி பற்றிய பாரதியாரின் சிறப்புக் கருத்துக்களையும் எடுத்துக்கூறி உரையாற்றினார்.

குற்றவியல் நடுவர் திரு நரசிம்மன் நன்றி நவின்றார்.

## தேவாரம் — சில செய்திகள்

| | |
|---|---|
| திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் | 16,000 |
| கிடைக்கப் பெற்றவை | 4,159 |
| திருநாவுக்கரசு நாயனார் அருளிய பாடல்கள் | 49,000 |
| கிடைக்கப் பெற்றவை | 3,045 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பாடல்கள் | 38,000 |
| கிடைக்கப் பெற்றவை | 1,026 |
| மூவர் தேவாரப் பாடல் பெற்ற கோயில்கள் | 276 |

— நன்றி 'தமிழரசு' 16-9-'88.

## வ.உ.சி. யின் இலக்கியத் தொண்டு

வ.உ.சிதம்பரனார் ஒரு விடுதலைப் போராட்ட வீரர் என்பது எல்லோரும் நன்கறிந்த செய்தி. அவருடைய இலக்கியத் தொண்டினையும் தமிழ்ப் புலமையையும் பலர் அறிந்திருக்க இயலாது. வ.உ.சி இயற்றிய நூல்களின் பட்டியல் பின்வருமாறு:

1. உரைநடை நூல்கள்: (மொழி பெயர்ப்பு) மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்குமார்க்கம், சாந்திக்கு மார்க்கம்; எனது அரசியல் பெருஞ்சொல் (சொற்பொழிவு), வ.உ.சி. கண்ட பாரதி (வாழ்க்கை வரலாறு).
2. செய்யுள் நூல்கள்: மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை.
3. பதிப்பித்த நூல்கள்: திருக்குறள் – அறத்துப்பால் – மணக்குடவர், தொல்காப்பியம் – பொருள் – இளம்பூரணம், தொல்காப்பியம்–எழுத்து–இளம்பூரணம்.
4. உரையெழுதிய நூல்கள்: இன்னிலை, திருக்குறள், சிவஞானபோதம்.
5. வ.உ.சி. எழுதி அச்சில் வராத நூல்கள்: திருக்குறள் அறத்துப்பாலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, ஊழை வெல்ல உபாயம், முத்தி நெறி, அழகும் ஆரோக்கியமும், ஆயுளை நீட்டிக்கும் நெறி, சிவமதம், விஷ்ணு மதம், புத்தமதம், இஸ்லாம் மதம், கிறிஸ்து மதம், மனித மதம், பேரின்ப மார்க்கம், திருக்குறள் – மணக்குடவர் உரை – பொருட்பால், திருக்குறள் – மணக்குடவர் உரை – காமத்துப்பால்.

— நன்றி, 'தமிழரசு' 16.9.88.

## அறிவியல் தமிழுக்குத் தனித் துறை

"அறிவியல் தமிழுக்குத் தனித்துறை கண்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தை வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

தமிழ்வழி படித்தால் எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கை இளைய சமுதாயத்திடம் வர வேண்டும்.

இந்த நம்பிக்கையை ஊட்டும் பொறுப்பு இச்சமுதாயத்திற்கு உண்டு!"

— அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழக முதலாவது கருத்தரங்கு நிறைவு விழாவில் துணைவேந்தர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி.

## அறிவியல் தமிழ்ப் பரப்பு முப்பெரும் பணிகள்

"அறிவியல் தமிழில் எழுதுதல், அறிவியலைத் தமிழ்வழி கிராமப்புற மக்களுக்குக் கொண்டு செல்லுதல் மற்றும் அறிவியல் தமிழுக்கு இலக்கணம் எழுதுதல் ஆகிய முப்பெரும் பணிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது; ஆயிரக் கணக்கான கலைச் சொற்களைத் தொகுத்து உள்ளது. தூயதமிழ்க் கலைச் சொற்களைத் தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத் தொகுதிகள் யாவும் விரைவில் வெளியாகும்"

– அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழக முதலாம் கருத்தரங்கின் தொடக்கவிழாவில் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் ஆற்றிய அறிமுக உரையிலிருந்து.

## நூல்கள், சுவடிகள் அன்பளிப்பு

பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் தம்மிடம் இருந்த பழைய ஆவணங்களையும், எட்டு பழம்பதிப்பு நூல் களையும் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித்துறைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். பேராசிரியருக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறது.

கோவையைச் சார்ந்த திருமதி சி.ஞானாம்பாள், 20 பழஞ்சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித்துறைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவர் களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

## நடுவண் அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வருகை

8-10-'88 அன்று மாலை நடுவண் அரசின் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் (திருமதி) இராசேந்திர குமாரி பாஜ்பாய் அவர்கள் திருச்சியிலிருந்து குடந்தை செல்லும் வழியில் துணைவேந்தர் இல்லத்திற்கு வருகை தந்தார்.

துணைவேந்தரவர்களும், பதிவாளர் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அலுவலர்கள் ஆகி யோரும் வரவேற்றனர்.

துணைவேந்தரவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி அருந்திய பின் மாண்புமிகு அமைச்சர் குடந்தைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மலைவாழ் மக்கள் அருங்காட்சியகத்தை அமைப்பதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆர்வம் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத்தின் முதலாம் கருத்தரங்கப் பரிந்துரைகள்

இருநாள் நடைபெற்ற இக்கருத்தரங்கத்தின் நிறைவு நாளன்று கீழ்க்கண்ட முடிவுகள் பரிந்துரைக்கப்பட்டன.

அ. முதன்மைப் பணியாகத் தமிழிலுள்ள பலதுறைக் கலைச் சொற்களைத் திரட்டித் தரப்படுத்தி அவற்றை அகராதி களாக வெளியிடுதல். இப்பணி தமிழ்ப் பல்கலைக் கழகத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படலாம்.

ஆ. அறிவியல் மொழி நடையையும் உள்ளடக்கியதாக இக் காலத் தமிழிலக்கணம் எழுதப்படல் வேண்டும்.

இ. தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுவரும் 'தமிழ் வழி பொது மக்களுக்கு அறிவியல் பரப்புதல்' என்னும் திட்டத்தை இக்கருத்தரங்கம் பாராட்டுவதோடு தமிழகத்திலுள்ள மற்ற பல்கலைக்கழகங்களும் தங்கள் பகுதிகளில் இத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறது.

ஈ. அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத்தின் சார்பில் அறிவியல் இதழ் ஒன்று வெளியிடல்.

உ. நூறாண்டுகளுக்கு முன்பே மருத்துவத்தைத் தமிழில் கற்பித்த டாக்டர் சாமுவேல் பிஷ் கிரீன் நினைவாகச் சொற்பொழிவு ஆண்டுதோறும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடத்தப் பெறலாம்.

ஊ. அறிவியல் இலக்கியங்களைத் தமிழாக்கும் பணியில் தமிழகப் பல்கலைக் கழகங்கள் ஈடுபட வேண்டும்.

## அப்பர் தேவாரக் கருத்தரங்கு

| | | |
|---|---|---|
| நாள் | : | 6-10-'88, 7-10-'88. |
| நேரம் | : | முற்பகல் 10 மணியளவில் |
| இடம் | : | மொழிப்புலக் கருத்தரங்க அறை |
| தலைமையுரை | : | முனைவர் ச.அகத்தியலிங்கம் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் |
| மையக்கருத்துரை | : | தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் |

– இலக்கியத்துறை.

## நர்சரிப் பள்ளிகளில் ஆங்கிலம் வேண்டாம்!

கீழ்நிலையிலிருந்து (நர்சரிப்பள்ளி நிலையி லிருந்து) ஆங்கிலம் கற்பிக்கப்படுவதை நீக்க வேண்டும். அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு இது துணைபுரியும். ஐந்தாம் வகுப்புவரை தமிழ்தான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும்.

– அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழக முதலாவதுகருத்தரங்கில் திரு சி.சுப்பிரமணியம்.

தமிழ்ப் பல்கலைக்கழகச்
**செய்தி மலர்**
திங்களிதழ்
பதிவு எண் 15033/8881

இ.அ.அ. மட்டும்.

) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா

## தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய வெளியீடுகள்

1. __வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி ஆறு__

ஏகாம்பரநாதர் உலா முதல் கனோபிக்குச் சாடிகள் ஈறாக உள்ள பல்வேறு தலைப்புகளில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. நூல் நிலையங்களிலும் அறிஞர் பெருமக்கள் இல்லங்களிலும் இடம்பெற வேண்டிய அறிவுக் களஞ்சியம்.

பக்கங்கள்: 1018 விலை: உரு. 300/-

2. __வியாசரும் வில்லியும் ஒரு திறனாய்வு__

ஆசிரியர்: ச.கு. கணபதி

வடமொழியில் வியாசர் இயற்றிய மகாபாரத மூலநூலையும் தமிழ்மொழியில் வில்லிபுத்தூரார் இயற்றிய பாரத வழிநூலையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து வியத்தகு செய்திகளை ஆசிரியர்வழங்குகிறார். படித்துச் சுவைக்கத் தகுந்த நூல் இது.

பக்கங்கள்: 247 விலை: உரு. 24/-

3. __நுண்ணலகுகளும் இராகங்களும்__

ஆசிரியர்: து.ஆ. தனபாண்டியன்

இராகங்களில் என்னென்ன சுரங்கள் நுண்ணலகுடன் (நுட்பச் சுருதியுடன்) வருகின்றன; அவற்றின் அளவுகள் என்ன என்பவற்றைத் திட்டவட்டமாக அறிவிக்கும் நூல் இது. நம் இசையின் இனிமையும் சிறப்பும்இந்த நுண்ணலகுகளில்தான் உள்ளன. இந்நுண்ணலகுகளில் ஒலித் துடிப்புகள் படங்கள் மூலமும் விளக்கப்பட்டு உள்ளன. இசைக் கலைஞர்கட்கு இந்நூல் ஒரு கருவூலம்.

பக்கங்கள்: 378 விலை: உரு. 50/-

4. __மூவர் திருமுறைப்பாடல்கள்__

தொகுப்பாசிரியர்கள்: பேரா. து. ஆ. தனபாண்டியன்
திருமதி ஞானா குலேந்திரன்
செல்வி பி.எஸ். லோச்சன்

இதுவரை சுர, தாளக் குறிப்புகளோடு வெளி வராத மூவர் அருளிய எழுபத்தைந்து தேவாரப் பாடல்களுக்கு உரிய சுர, தாளக் குறிப்புகளை இந் நூல் விளக்குகிறது. தமிழிசை மரபு பாதுகாக்கப் பட வேண்டும் என்ற பெருநோக்கோடு உருவானது. இசைப் பேரறிஞர்களின் பெருமுயற்சியில் தோன்றிய இந்நூல் இசைபயிலும் மாணாக்கர்கட்கும் இசை ஆய்வாளர்கட்கும் பயன்படுவது. ஓதுவாமூர்த்திகளின் படங்கள் கொண்டது.

பக்கங்கள்: 132 விலை: உரு. 20/-

5. __குழந்தைகளுக்குக் காந்தி__

ஆசிரியர்: திருமதி அரோமா குளோரிசாம்

பக்கங்கள்: 72 விலை: உரு. 10/-

6. __சிறுவர்களுக்கு நேரு__

ஆசிரியர்: பா. சுப்பிரமணியம்

பக்கங்கள்: 43 வி... : உரு. 5/-

### உறுப்பினர் கட்டண விவரம்

**செய்திமலர் / நியூஸ் புல்லட்டின்**

| | | |
|---|---|---|
| ஓராண்டு | உரு. 5/- | $ 4 |
| ஈராண்டு | உரு. 10/- | $ 8 |
| மூவாண்டு | உரு. 12/- | $ 10 |

**தமிழ்க் கலை / தமிழ் சிவிலிசேசன்**

| | | |
|---|---|---|
| தனியிதழ் | உரு. 15/- | $ 3 |
| 2 இணைப்பிதழ் | உரு. 30/- | $ 6 |
| ஓராண்டு | உரு. 60/- | $ 15 |
| ஐந்தாண்டு | உரு. 240/- | $ 60 |

### களஞ்சிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| அறிவியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு. 300/- |
| " " | தொகுதி-2 | உரு. 300/- |
| " " | தொகுதி-3 | உரு. 300/- |
| வாழ்வியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு. 300/- |
| " " | தொகுதி-2 | உரு. 300/- |
| " " | தொகுதி-3 | உரு. 300/- |
| " " | தொகுதி-4 | உரு. 300/- |
| " " | தொகுதி-5 | உரு. 300/- |
| " " | தொகுதி-6 | உரு. 300/- |
| சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் | தொகுதி-1 | உரு. 250/- |
| " " | தொகுதி-2 | உரு. 250/- |

கழிவு: 25% அஞ்சற் செலவு தனி

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001